'கலகலப்பு' வாசகர்களுக்கு

பிறைற்ரன் இன்ஸ்ஸிரியூட்

BRIGHTON BEST INSTITUTE

தித்திப்பான தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

K. K. S. வீதி, கொக்குவில். "BOND"







1973 தீபாவளி இதழ் விலை சதம் 50.

## ஆதரவாளர்க்கு தீபாவளி வாழ்த்து

# S. S. நெல்லையப்பாபிள்ளை அன் கோ

★ ★

உள்நாட்டு விளை பொருட்கள் விற்பனையாளர்களும்
கமிஷன் ஏஜென்ட்

தொலைபேசி : **29568**

141, மலிபன் வீதி, கொழும்பு 11

---

ஒரு கோழி : என்னப்பா சாப்பாடு தட்டுப்பாடுகாலத்திலும் நல்ல கலகலப்பாக இருக்கிறாய்?

மற்றக்கோழி : எனக்கென்ன கவலை எனக்குத்தான் இருக்கிறதே

A. P. சுப்பையா

## 'போறேஜ் ஸ்ரோர்'

கோழிகளுக்கு சிறந்த உணவுவகை வாங்கவும் மற்றும்
கால்நடைகட்கும் தேவையான மருந்துவகைகள்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி : **31151** விபரங்கட்கு: S. ராஜரத்தினம்

63, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

---

பகையாதீர்கள் ! புகையுங்கள் !!

# ஹுசேன் பீடி

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்

தொலைபேசி : **32404**

S. ராஜரத்தினம்

ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13

---

சிறந்த சாப்பாடு பலரும் நாடுவது

# யாழ் போசனசாலை

உரிமையாளர்

K. K. பரராஜசிங்கம்

30, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

---

'கலகலப்பு' வாசகர்களுக்கு

கலா இண்டஸ்ரீசாரின் தீபாவளி வாழ்த்துக்கள்

## சில்வர் வைற் நீலசோப், பார்சோப்

தயாரிப்பாளர்கள்

கலா இண்டஸ்ரீஸ்

**கோண்டாவில்**

உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்

---

பக்தன்— இறைவா ஏன் திடீரென பூலோகத்திற்கு வந்துவிட்டீர்கள்.
இறைவன்— பக்தா வேறொன்றுமில்லை ஏதோ கம, கம வென்றும் ஒரு புகை வாசனை என் மூக்கைத் துளைத்தது அதுதான்
பக்தா—அப்படியொன்றுமில்லை இறைவா எல்லாம் வை. சி. சி. கு. சுருட்டும் புகையிலையும்தான்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

## T. சண்முகராஜா

152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

---

வெளிவந்துவிட்டது !

வன்னியூர்க் கவிராயரின்

## ஈழத்துக் காவிய தீபம்

(சிறுகதைத் தொகுதி)

---

உங்கள் வீட்டு மங்கள சுப
வைபவங்களை
சிறந்த முறையில் படம்பிடிக்க

## குலசேகரம் படப்பிடிப்பாளர்

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

## ஆசிரியர் பக்கம்

வாசகர்கள் + A

ஒரு அங்குல இடமேனும்
விடாது விவசாயம் செய்க.

— பிரதமர்

[B]

மேலுள்ள இடைவெளியில்
உங்களால் என்ன செய்ய முடியும்
செய்யுங்கள்

— தீசன்

**மாணவர்**
**பரிசுப் போட்டி இல. 1**
பக்கம் 2

## ஊராரின் கைபிடித்து உன்னப்பன் சேவைசெய்ய ஊர்வசியர் கைபிடிக்க உதித்தவனே கண்வளராய்

அலராம் அடிக்க மம்மிவந்து பால்தருவா
அப்போதிக்கரிபிள்ளை அருந்தவமே கண்வளராய்

சிரமேல் குடைபிடித்து சிறிசேனு உதவியுடன்
லக்பிறே பெற்றுவந்தேன் லட்டே நீ கண்வளராய்

கூப்பனுக்கும் துணியில்லை கூட்டுறவும் சரியில்லை
கூச்சமின்றி உதித்துவந்த குயில்குரலே கண்வளராய்

விண்ணப்பம் போட்டு வீதியெல்லாம் நானலைந்து
பள்ளியிடம் பெற்றிடுவேன் பைங்கிளியே கண்வளராய்

நல்லதமிழ் புகட்டி நானுன்னை வளர்த்திடுவேன்
தமிழ்தனையே விக்காதே தத்துவமே கண்ணுறங்கு

கல்லூரியென்றுவிட்டு களவாக நீ சென்று
பகல்சினிமா பார்க்காதே சீராளா கண்ணுறங்கு

வீதியிலே செல்லுகையிலே விசிலடித்து கன்னியரின்
பாதனியின் பதமறியா பற்குருவே கண்வளராய்

**ஊராரின் கபைிடித்து உன்னப்பன் சேவைசெய**
**ஊர்வசியர் கைபிடிக்க உதித்தவனே ! கண்வளராய்**

உள்ளியில்லையென்ருலும் உனக்கேன் கவலையடா
உன்னப்பன் அறிமுகத்தால் வீட்டிற்கே உள்ளிவரும்
விக்காமல் கண்வளராய்

ஆண்டுக்கொருகட்சி, அடிக்கொருக்கால் மனம்மாறும்
மாமனுரிருக்கையிலே உத்தியோக பயம்வேண்டாம்
மருக்கொழுந்தே கண்வளராய்

— இணுவையூர் - வாலி


## காதல் தோல்வியா ?
## கல்விக் குழப்பமா ?

பொலிடோலை அருந்தி வெளிநாட்டு செலவாணியை அதிகப்படுத்தாமல், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முறுக்கேறிய கயிற்றில் தூங்குங்கள்.

அதனுல், இறக்கும்போதும் தாங்கள் உள்நாட்டு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியளிக்கிறீர்கள்.

ஆட்கள் பருமனுக்கேற்றவாறு கயிறு ஓடருக்கு குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:
உயிர்விழுங்கி & Co.
உருக்குலைப்பேட்டை,
யமநாடு.

[பழைய கயிறுகளில் தூங்கி தங்கள் தற்கொலை தடைப்பட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல]

சலுகை ! சலுகை ! சலுகை ! சலுகை !

**பாடசாலை மாணவர்களே**

தங்களுக்கு தேவையான
**முந்திரிகைக் கன்றுகளை**
25% கழிவுடன் பெற்றுக்கொள்ளுங்கள்.
ரயில்வே நிலையங்களுக்கு அருகிலுள்ளோர்
ரயில்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கட்கு: S. K. தீசன்
சாந்தி தோட்டம்,
இணுவில்.


**விலைவாசி காலத்திலும் எனது மலிந்த தீபாவளி வாழ்த்துக்கள்** — தீசன்

## ராதையின் நெஞ்சமே கண்ணனுக்கு சொந்தமே என்ற மெட்டு

இயற்றியவர் : இணுவையூர் வாலி

பாடியவர்கள் : பாடசாலை மாணவர்கள்

சுமதியின் நெஞ்சமே
சுந்தருக்குச் சொந்தமே
ஆயிரம் ஏச்சுக்கள்,
கல்லூரி நாளிலே கண்ணடித்த நினைவுகள்
லெட்டர் தந்த போதிலே
அதிபரோடு வகுப்பில் வந்து
'டிஸ்மிஸ்' செய்த பேதையே!
(சுமதியின்)

தினம் தினம் நீ வரும்,
பஸ்ஸினில் ஏறுவேன், துனிவிலே ஏறினும்
பெல்பொட்டம் மாட்டுவேன்,
பொலிஸ் என்னைக் கலைத்த போதும்
டபிளில் ஏறி ஓடுவேன்;
(சுமதியின்)

குறிப்பு :
சுமதி, சுந்தர் பெயர் கற்பனை
அதிபர் டிஸ்மிஸ் சம்பவம் உண்மை (ஆகலாம்)
(ஆ-ர்.)


தித்திப்பான தீபாவளி வாழ்த்துக்கள்

**V. T. சுப்பிரமணியம் & சன்ஸ்**
(அரசாங்க குத்தகைகாரர்)

மோட்டார், உளவுயந்திரம், மற்றும் நீரிறைக்கும்
இயந்திர உதிரிப் பாகங்கள்

விற்பனையாளர்கள் :
V. T. சுப்பிரமணியம் பஸார் வீதி,
V. T. S. கேதீஸ்வரன் வவுனியா.


## கலகலப்பு மாணவர் பரிசுத்திட்டம் இல 1

என்னருமை வாசக அன்பர்களே!
இளம் எழுத்தாளர்களே!

கலகலப்பு நடாத்தும் மாணவப் பரிசுப் போட்டியில் கலந்து, அரிய பரிசுகளைப் பெறுங்கள்.

முதல் பரிசு 25-00 இரண்டாம் பரிசு 15-00
மற்றும் ஆறுதல் பரிசு 12 ஒவ்வொரு பேனு

**போட்டி விபரம்**

★ பாடசாலை, பஸ்ஸில் அல்லது பரீட்சை மண்டபத்தில் நடைபெற்ற நகைச்சுவையூட்டும், சம்பவத்தை சுவைபட 250 சொற்களுக்கு கூடாமல், எழுதியனுப்புங்கள்.

அல்லது

★ சிறந்த கேலிச் சித்திரத்தை, (பாடசாலை சம்பவத்தை சித்தரிக்கக்கூடியது) சாதாரண தாளில் கீறி அனுப்புங்கள்.

**விதிகள்**

★ அனுப்பப்படுவவை திருப்பி அனுப்பப்படமாட்டா.

★ பரிசு பெற்றவைதவிர தரமானவை பிரசுரிக்கப்படும்.

★ இதுவிடயமாக எதுவித கடித தொடர்பும் வைத்தல் கூடாது கூப்பன் இணைத்து வருபவை மாத்திரம், சேர்த்துக்கொள்ளப்படும் ஒருவர், சித்திரத்தையும், சம்பவத்தையும் ஒரு கூப்பனுள் அனுப்பலாம்.

கல / இல / 1
பெயர்..............................
முகவரி..............................
..............................
பாடசாலை... ..............................
வகுப்பு..................
திகதி......................
..............................
கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி

S. K. தீசன்
மாணவர் பரிசுத்திட்டம் இல-1
கலகலப்பு
இணுவில்

## இன்னும் சிலநாட்களில் இப்படியும் செய்தி வரலாம்

★ யாழ்ப்பாணத்திலிருந்து தகர டப்பாக்களில் அளவுக்கு அதிகமான நீரை கொழும்புக்கு கடத்திவந்த ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

★ செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அதிகளவு சோறு உண்ட சிலர், கையும் களவுமாக கைதுசெய்யப்பட்டனர்.

★ சிகாகோ பாணியில் சீனி திருட்டு, கெ கெப்டர் மூலம் கிழங்கு கடத்தல்.

★ இன்று, மாலை, அரிசி, சீனி, குரக்கன், சாமி, உள்ளி மற்றும் சில உணவுப் பொருட்கள் பொருட்காட்சிக்கு வைக்கப்படும், பொது மக்கள் அழைக்கப்படுகின்றனர், அரிய சந்தர்ப்பம்

★ தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பால் விலை ஏறியது பால் உத்தியோகஸ்தர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

★ சுடுநீர் போத்தலில் அரிசி கடத்தல் சுண்டிக் குளியில் இருவர் கைது.

★ உண்ணாவிரதம் இருப்போர்க்கு தங்கப் பதக்கம் புதிய தீர்மானம்

★ பிக்னிக் புரியாணியும் பிடிபட்ட ஜோடியும்

★ காவடி எடுத்தவீட்டில் அன்னதானம் அளவுக்கு அதிகமானோருக்கு வழங்கியதால் விசாரணைக் கமிஷன்.


ஆதரவாளர்களுக்கு
**கலகலப்பான**
தீபாவளி வாழ்த்துக்கள்
**நவலங்கா ரேடேர்ஸ்**
10, சென் ஜோன்ஸ் ரோட்,
கொழும்பு-11.


THESAN Editor of "Kalakalappu" INUVIL

"போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்ற
பொன்மொழி படித்தவர்களே !

இதோ

கீழ் கரவை பொன்னையனின்

# "அது போதும்..."

"மெல்ல மெல்ல... இண்டைக்கு நானும் இல்லையெண்டால் அந்தக் காப்புலிக் கூட்டம் உன்னை அக்குவேறை ஆணி வேறையாப் பிச்சுப் புடுங்கியிருப்பங்கள்"

"ஓமெண்டன். நானும் கும்புடுற அந்தப் பிள்ளையாராப் பாத்து உன்னை அதிலை கொண்டு வந்து விட்டது...ச...ச்...ச...ச... இல்லையெண்டால் என்னை அவங்கள் இண்டைக்குச் சவமாக்கியிருப்பங்கள்..." என்றபடி அலைஞ்ச கணபதியானின் தோளிலை சாய்ந்தபடி வேதாளம் வேலுப்பிள்ளை வந்தார். தன் புருசனுக்கு ஏதோ ஒண்டு நடந்திருக்கெண்டு ஓடிவந்து பார்த்த தங்கத்துக்கு தூக்கிவாரிப் போட்டது. எப்பவோ ஒருநாளைக்கு இப்படி வரும் எண்டு அவளுக்குத் தெரியும். அதுக்காக... என்னதான் அவர் பிழைவிட்டாலும் இப்படியே செய்யிறது...

"இந்த முதுகெல்லாம் என்ன... கொழுக்கட்டை மாதிரியெல்ல வீங்கி இருக்கு. இதென்ன இது எனக்கு ஒண்டுமா விளங்கையில்லை"

"நேரத்தை மினக்கெடுத்தாதை. அவன் மனுசன் புழுப்புழுவாத் துடிக்கிறான். முதல்லை நோவெண்ணையைக் கொண்டுவந்து போட்டிட்டுக் கதையைக் கேள்...போ... ஓடிவா தங்கம்" எனத் தங்கத்துக்கு ஒரு சொல்லும், "மெய்யே அண்ணை இப்ப என்ன செய்யுது" என்றார் கணபதியான்.

"என்னதம்பி வயது போனவன் எண்டு பார்த்தாங்களே. ஊ...ஊ... ஆ...ஆ... எந்தப் பக்கத்துக்கெண்டு அசைய..."

ஓடிப்போய் பக்கத்து வீட்டிலை நோவெண்ணையை வேண்டிக் கொண்டு வந்த தங்கத்துக்கு இரண்டுபேரும் ஒண்டையும் சொல்லாமல் மறைக்கத்தான் முயன்றனர். இது அவளுக்கு ஒரு மாதிரி...

"எங்கை நோகுது... எந்தப் பக்கத்திலை... என்ன பேசாமல் இருக்கிறாய். வாயைத் துறந்து சொல்லன்"

என்னப்பா! நீ ஒரு அறிவில்லாத கதை கதைக்கிறாய். அவங்களென்ன ஒரு பக்கத்தோடை விட்டவங்களே. நானும் இவங்களென்னத்தை வெட்டிப் புடுங்கிறாங்களெண்டு எட்டிப் பார்த்தன்... அவ்வளவுதான்... வந்தாங்கள் உந்த வேட்டை நாயள் மாதிரி... என்னடா எங்களையெல்லாம் காட்டிக் குடுத்திட்டு இப்ப வேடிக்கை பாக்க வந்திட்டியோ எண்டாங்கள்... வாயை நான் திறக்க விட்டாங்களே. ஐயையோ, பூட்டுப் பூட்டாயெல்ல நோகுது. ஒவ்வொருத்தன்ரை கையும் இரும்புலக்கை மாதிரியெல்லே. எனக்கேதோ மின்னி மறைந்தது. அவ்வளவுதான். நானென்னத்தைச் சொல்ல!

கல்லெண்டாலும் கணவன் புல்லெண்டாலும் புருசன் எண்டு வாழுற தமிழ்க்குலப் பெண்தானே தங்கமும். அவளுக்குத் தன்ரை புருசன் பந்துக்களுக்குத் துரோகம் செய்துவாறது பிடிக்காவிட்டாலும்... அவனை நம்பிக் கழுத்தை நீட்டினதின்பின் என்னசெய்யிறது. 'நான் எத்தினை நாள் உனக்குச் சொன்னனான் இந்த ஊர் உளவாரம், ஊர்ப்பிசகு வேண்டாம்... அவன்ரையை இவனுக்குச் சொல்லி இவன்ரையை அவனுக்குச் சொல்லி... மற்றவயின்ரை பிசகுக்கை மாட்டுப்படாதையெண்டு... உன்ரை இனத்தைக் காட்டிக்குடுத்து என்னத்தைச் சம்பாதிச்சாய்... பொல்லாப்பைத்தானே..." அவளுக்கும் வேதனைதான். இப்படி வந்தால் தன்ரை இனந்தானே அழியும். எல்லாரும் அழிய தானும் புருசனும் வாழுறதா? ச... வாழ்ந்தால். எல்லாரும் மானமாக வாழவேணும் இல்லை மடிந்தால் எல்லாரும் மானத்தோடு – மானத்துக்காக மடிய வேணும்.

"இல்லையடியப்பா! இவங்களைப்போல எத்தினபேரைக் கண்டு வந்தனான்." என்ரை வட்டத்துக்குள்ளை இவங்கள் ஆடவேணும். இல்லை... நான் கெட்டாலும் இவங்களைக் கூண்டோடு பிடிச்சுப் பூண்டோடு பொசுக்காமல் விடன்... செ..."

"அப்ப! நீ என்ன நாலு அண்ணன் தம்பியோடை பிறந்தனியே அடிபிடி சண்டைப்பட"

"இல்லை. நானும் ஒருக்கால் ஆத்திரத்திலை கையைத் தூக்கினனான் தான். ஆரோ பின்னாலை நிண்டிட்டு ஒரு தீட்டுத் தீட்டிவிட்டான்...ச... கையிரண்டாச்செண்டுதான் நினைச்சன். அது எந்தக்கையிலையெண்டால்" என்றபடி கையைத் தூக்கித் தேடிக்கொண்டு கண்டுபிடிக்க முனைந்தார். "ஐயோ! இதென்ன அநியாயம்... எண்டபடி நோவெண்ணையைப் போடத்தொடங்கினாள் தங்கம், "கொஞ்சம் இந்தக் கதிரையில் இரன்..."

"ஆ...ஆ...ஊ...ஊ... தொடாதை... தொடாதை, இதிலைதானப்பா அந்தச் சடையன் கடைசியாகக் கொண்டுவந்து போட்டவன்"

"ஐயோ இதென்ன இது. கொய்யாப்பழம் போலையெல்ல கண்டிச் சிவத்துப் போச்சு... இந்தக் கையை நீட்டு முதல்..."

''பூட்டுப்...பூட்டு...பூட்டு கழருது போலை கிடக்கு. இதிலைதானப்பா அந்த வட்டுக்காயன் காலாலை கயக்கினவன். அதை ஒண்டொண்டா நினைக்க நினைக்க செத்தாலென்ன எண்டு கிடக்கு''

''கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்; கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்'' என்ற பாவிற்கிணங்க பண்டை காலம் தொடக்கம் இன்றைய காலம்வரை நெறிதவறுது - முறைவழுவாது - கணவனேபதி அவனுக்கே தன்பணி என வாழ்ந்துவந்த தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திழைத்தவன்தான் தங்கமும். கணவன் உடல்நோக மனைவி இதயம் நோகும் என்பது தங்கத்தைப் பொறுத்தவரை உண்மைதான்.

தன்ரை புருசன் கெடுகிறன் பந்தயம்பிடி - தன் மூக்குப்போனுலும் எதிரிக்குச் சகுனப்பிழை வரவேண்டும் எண்டு நினைக்கிறனைத எண்ண வேதனைதான். இருந்தும் தன் கணவனுக்கு ஒண்டுவந்தால்... செத்துக்கித்துப் போனுல் தான் தாலிகழட்டவேணுமே என்பதை எண்ண ..

''மெய்யே ஆழில்லாதவை இனி இந்த உலகத்திலை சீவிக்கிறதில்லையே, இண்டைக்குப் பொலிசைக் கூட்டிவந்து நானும் உவங்களை...''

''ஓமடி... பாண்கட்டையும் இல்லாத இந்தக் காலத்திலை... அவனும் இந்த மிச்ச சொச்சத்தைப் பதம்பார்க்கட்டும்...''

இரண்டுபேரும் கதைக்கத் தனக்கொண்டும் கதைக்க இல்லையே என இருந்த அலைஞ்ச கணபதியான் ஒண்டையாவது சொல்லுவம் என ''ஆ சரி, இதுக்கொரு நடவடிக்கை எடுக்காவிட்டால் தட்டுத் தவறி கிழடுகட்டையள் உலாவேலாதுபோல... பின்ன'' எண்டு முணுமுணுத்தார், தனக்கும் இதே நிலை வந்தால் என்ற பயமும்கூட.

''கணபதி... உனக்கு மூக்கைப் பொத்திஞல் வாயைத் துறக்கத் தெரியாது. உனக்கேன் இந்தவேலை. எனக்கிருக்கிற நோபோதும்... நீ வந்த வேலையைக் கவனி பிறகுமென்னைப் பிடித்தடிக்க இந்த உடம்பு தாங்காதுகாணும்... படிப்பிக்க வெளிக்கிட்டால் பைசா வேணும். இந்தக் காலத்திலை வட்டமில்லாதவன்பாடு வாய்மண்''

''அப்ப... காசில்லாத உனக்கு இந்த வேலை ஏன் ?

''இதை இன்னுமொருக்கால் இவருக்குச் சொல்லண்ணை, இனியாவது திருந்துகிருரோ எண்டு பாப்பம்''

''நீ என்னடி சொல்லுருய்''

''இஞ்சை பார்: இந்த வாய்தான் கூடாது. நீ படுகிறதும் உன்ரை வாயாலைதான். கெடுகிறதும் உன்ரை வாயாலைதான்......ச... இந்த நோ இனி இப்போதைக்கு மாருது. செ... எப்படியும் என்ரை பொடியளை விட்டு ஒருபோத்தல் சாராயம் எடுத்துப் போடுறன்.''

ஓமடி. அதுதான் இப்ப குறைச்சல், என்ரை நோவும்மாற உன்ரை மோனும் குடிபழக கையும் கணக்கும் சரிவரும்''

சும்மா இருந்த கணபதியானுக்கு மனம் புழங்கினபடிதான். 'அண்ணை, எனக்கேதோ இதைப் பேசாமல் விடுறது அவ்வளவு நல்லதாப் படயில்லை'

''கணபதியண்ணை, நானும் உந்தச் சோமாலை மாதா கோவில்லை பழிபோட்டு ஒரு இழைக்கட்டியாவது இவங்களின்ரை கால் கை அழுகப் பண்ணுமல் நானும் வாயிலை சோறெடன்... இல்லை நானும் வேதாளம் வேலுப்பிள்ளையின்ரை பெண்டில் தங்கம் இல்லை... செ...'.

'ஓ... இப்ப அரிசியில்லை... பாணில்லை... இப்ப எல்லாரும் பட்டினி தானே... இது என்ரை மனுசிற்கு நல்லாத் தெரியுது. சரி...சரி... உன்ரை உண்ணுவிரதப் போராட்டத்தையும் பாப்பமே...''

என்ன சிண்டலா...

பின்னை நீயென்ன கதைகதைக்கிருய். கடவுளைக்கேட்டே அவங்கள் கைகால் பாவிச்சவங்கள். ச...ச...ச... என்ன காஞ்சமாடு கம்பிலை விழுந்தமாதிரி விழுந்தாங்களே... நான்தான் அம்பிட்டன்" என்றபடி மெதுவாக எழும்பி... 'இது கலிகாலம், கடவுளுக்கு இப்ப லீவு. சரி...என்னுலை நெடுக இருக்க முடியாது. நான் சரியப்போறன்... வாறதெல்லாம் ஒண்டுக்குமேலை ஒண்டாகவலு வில்லங்கத்திலைதான் வருகுது. இதெல்லாம் என்னத்திலை வந்து முடியப்போறதோ...பிள்ளையாரே...'

எல்லாத்தையும் கேட்டுக்கொண்டிருந்த கணபதியாருக்குத் தத்துவந்தான் உதித்தது.

'அண்ணை, வெறுங்கை முழம்போடாது. கறந்த பால் முலை ஏருது... எண்டுதான் இப்ப எனக்குத் தெரியுது... ஓ... ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு... ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு... எண்டு அவருரோ பாடினதிலை உண்மை இருக்கு...'

'ஓம்...ஓம்... இதை நானும் 'உணருறன் போலை'

'அப்ப சரி... அதுபோதும்'

இப்பவாவது உங்கடை பிழையை ஒத்துக்கொள்ளுறியளே... அது போதும்... என்ருள் தங்கம். ஒரு இன்பச் சிரிப்பு. வேதனையிலும் வேதாளம் சிரித்தது.

(யாவும் கற்பனை)

# சினிமாத் தலைப்பும் செய்தியில் மலைப்பும்

-டோ

※ மணமுடித்த ஆடவனுடன், பெற்றோரை விட்டுச்சென்றாள் கன்னி

★ பிள்ளையோ பிள்ளை ★

※ பொருட்கள், விலையுயர்வையடுத்து உணவுக்களங்கள் பலத்தகாவல்

★ ''பாது காப்பு'' ★

※ பொருட்கள் தட்டுப்பாடு, ஹோட்டல்கள் இழுத்து மூடப்படுகிறது

★ ஒரே வழி ★

※ வினாத்தாளுடன் பணத்தையும் இணைத்து அனுப்பினார் பரீட்சார்த்தி

★ ஆயிரத்திலொருவன் ★

※ அரை அங்குல நிலமேனும் வீணாகாமல் விவசாயம் செய்க

★ அரச கட்டளை ★

※ தனிநாடு பெறுவோம், கூட்டணியினர் அறிக்கை

★ சபதம் ★

※ ஸ்ரீலங்கா கட்சி பிரமுகர் கூட்டணி தொண்டர்களுக்கு பழரசம் வழங்கினார்.

★ சங்கமம் ★

※ காதலியுடன் பறந்த கணவனை கோட்டில் அழைத்தாள் இளம் பெண்

★ அன்பே வா ★

※ தந்தையின் பராமரிப்பிலிருந்த பெண் காதலனுடன் ஓட்டம்

★ அப்பா டாட்டா! ★

※ கூட்டணியினரின் மாநாட்டில் பங்குபற்றாத ஜி. ஜி. க்கு வட்டு எம். பி. பாராட்டு

★ உலகம் இவ்வளவுதான் ★

※ யாழ் நகர் மத்தியில் பிரபல மகளிர் பாடசாலையில் 5 மாணவிகள் இளைஞருடன் சல்லாபம்

★ அரங்கேற்றம் or ஐடியல் மறேஜ் ★

※ தொட்டுத் தாலி கட்டிய கணவனை தனக்கு தெரியாதென்றாள் காதலி

★ யார்! நீ!! ★

※ கணவனை எனக்கு தேவையில்லை, அவர் பணம் தந்தால் போதும்

★ ஜீவனும்சம் ★

ஆதரவாளர்கட்கு,

'கலகலப்பான' தீபாவளி வாழ்த்துக்கள்

**சி. சின்னத்துரை & பிறதர்**

(பலசரக்கு வியாபாரம்)

(B. C. C.) பி. பி. சி. தயாரிப்புகள்

J. L. மொறிஸ் அன் சன்ஸ் தயாரிப்புகள்

ஏக விநியோகஸ்தர்கள்

தொலைபேசி: 284

39, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

※ ஆசிரியர் கன்னத்தில் பளார், பளார் என அறைந்தாள் மாணவி

★ குரு தட்சிணை! ★

※ யாழ்நகரில் இராணுவம் திரியக்கூடாது அரசாங்க அதிபர் அறிவிப்பு!

★ காவல் தெய்வம் ★

※ பாடசாலை செல்வதாகக் கூறி பகல் சினிமா சென்றாள் மாணவி

★ அவளுக்கென்றோர் மனம் ★

※ தமிழ்க்கடிதங்களுக்கு பதில் தமிழில் எழுதாதுவிடில், கடும் தண்டனை பிரதமர் அறிவிப்பு

★ பொண்ணுக்கு தங்கமனசு ★

※ யாழ் நகரில், இராணுவம், உதைபந்தாட்ட ரசிகர் மோதல்

★ சவாலே! சமாளி ★

※ கொழும்பில், குடிநீர் தட்டுப்பாடு மக்கள் அவதி

★ அனுபவி ராஜா அனுபவி ★

※ தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் நீடிக்கிறது

★ நம்ம குழந்தைகள் ★

※ கோயில் உண்டியல் விக்கிரகம் திருட்டு

★ காசேதான் கடவுளடா ★

※ பாடசாலை நேரத்தில், பாலியல் பாடம் கல்வி இலாகா விசாரணை.

★ நூற்றுக்கு நூறு ★

## குறைந்த விலை! நிறைந்த பயன்!

உங்கள் வைபவங்களுக்கு தேவையாயின் தொடர்புகொள்க!

| | | |
|---|---|---|
| சீனி | 1 றுத்தலின் விலை 1 ரூபா | (கூப்பனில்லாமல்) |
| மாவு | 1 றுத்தலின் விலை 40 சதம் | |
| பருப்பு | | |
| அரிசி | 1 கொத்து | 90 சதம் |

முதலியன எங்களிடம் கிடைக்கும்
விபரங்கட்கு

இப்படி யொரு விளம்பரத்தையாவது கடைக்காரர்கள் தருவார்களா என நான் அலைந்து களைத்து விட்டேன் இறுதியில் ஒரு துண்டு பாணும் ஒரு (சீனி குறைந்த) ரீயும் குடித்தேன் செலவு 75 சதம்

விளம்பர ஏஜன்ட்
விக்கல் விஞசித்தம்பி.



**விசுவர் :** என்னப்பா சுந்தரம், என்ரை தோட்டத்திலை விளைஞ்ச பொருட்களை கொளும்பிலை கொண்டுபோய் வித்தால், நல்லலாபமாயிருக்கும் அங்கை கொண்டுபோய் ஆருக்கு விக்கிறது

**சுந்தர் :** அதுக்கேன் கவலைப்படுகிறாய் உள்ளூர் உற்பத்தி பொருள் வாங்கி விக்கத்தானே கிடக்கு எங்கடை S. P. N. கொம்பனி

உள்ளூர் உற்பத்தி பொருட்கள் வாங்கவும் விற்கவும்

**S. P. N. & Co.**

181/185, கெஸர்ஸ் வீதி.

**கொழும்பு–11**


**இதனைப் படிப்பதற்கு முன்**

[வெருளி விசாலாட்சி வீட்டிலிருந்து ரகசியமாக கேட்டு எழுதியவர்] 'டோ'

# ஒரு குக்கரின் சுயசரிதை

**மு. கவனிப்பு :**

[மண்ணெண்ணை விலை கூடியதும் பாணுக்கு கியூ நின்றது தவிர மீதியில் சில கற்பனை]

இங்கிலாந்தில் செய்யப்பட்ட நான் கடல்கப்பல் மூலம் இலங்கைக்கு [மன்னிக்கவும் இப்போது இந்நாட்டுக்கு பெயர் சிரிலங்காவோ சிறீலங்காவோ ஏதோ] வந்தேன். எனக்கு கடல் பிரயாணம், கப்பல் வெரி சிலோவாகவந்ததன் ஒரே போறிங்காக இருந்தது. சிலோவாக நான் சிலோனை அடைந்தபின்னர், கள்ளக்கடத்தல் செய்பவர் ஒருவர் தனக்கு அறிமுகமான ஒருவரின் மூலம் குறைந்த விலைக்கு வாங்கினார். [ஜவ்னாவில் சில இடங்களில் குறைந்த சீதனத்தில் மாப்பிளை எடுப்பது போல]

எனது கஸ்டகாலமோ நல்லகாலமோ தெரியாது. வெள்ளவத்தையைச் சேர்ந்த வெருளி விசாலாட்சி என்பவ ஒரு குக்கரை வாங்கிவிட்டார் என்ற ஆத்திரத்தில் வயித்தெரிச்சல் வடிவக்ககா (அதாவது என் எஜமானி) என்னை வாங்கினார் [கள்ளமாக வைத்திருந்த 4 றுத்தல் மிளகாயையும் கணவனின் பழைய கோட்டையும் என்னை வாங்குவதற்காகத் தான் விற்றார் என வெருளி விசாலட்டாட்சி, சிரட்டைக்கரி சிறிசேனாவிக்கு கூறியதும் என்னதில் விழத்தான் செய்கிறது.

வாங்கிய புதிதில் எனக்கு நல்ல மரியாதை, (அவரின் கணவருக்கு கூட அப்படிக் கிடைத்ததில்லை) தினமும் சமைத்தால் புகை கூடிவிடும் என்பதற்காக இடையிடையேயும் சமையல் செய்து வருவது யாரும் அறிந்ததல்ல,

வடிவக்கா ஒரு ஒசிச்சட்டி என்னில் O. C. யில் சமையல் செய்யப் பாப்பார். (நான் என்ன இலங்கைப் புகையிரதமா? எனவே நான் O. C. யில் பிரயாணம் செய்வதை அனுமதிப்பதுபோல) (9-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. சாதாரணத்தேர்வு
### தமிழ் இலக்கியத் தொகுப்பு (அ) பாடத்திட்டம்

பக்கம் 32 திவ்வியப்பிரபந்தம் ii ஆண்டாள்

[வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவராய ஆண்டாளைச் சூடிக் கொடுத்த நாச்சியார் எனவும் கோதையெனவும் வழங்குவர். ''பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியவே'' என போற்றப்பெறும் அம்மையார் உலக வாழ்வை வெறுத்துத் திருமாலையே காதலித்து பக்தி ததும்ப மதுரமான பாக்களைப்பாடினர். இப்பாசுரங்கள் நாச்சியார் திருமொழி என வகுக்கப்பட்டது]

**— ஆண்டாள் கண்ட பக்திக்கனவு —**

1. நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளை புகுதக் கனக்கண்டேன் தோழீநான்

2. இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனக்கண்டேன் தோழீநான்

3. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் தம்பி மது சூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனக்கண்டேன் தோழீநான்

4. வாய் நல்லார் மறையோதி மந்திரத்தால்
பாசிலை நானல் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளி றன்னனென் கைப்பற்றித்
தீவலஞ் செய்யக் கனக்கண்டேன் தோழீநான்

5. இம்மைக்கும் மேல்லேழ் பிறவிக்கும் பற்றுவாள்
நம்மை யுடையவள் நாராய ணன்நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாழ்பற்றி
யம்மி மிதிக்கக் கனக்கண்டேன் தோழீநான்

---

## வாராய்! நீ வாராய்!!

சலரோக வைத்தியசாலையில்

ஒரு மூட்டை : வர வர வாழ்வே வெறுத்துப் போச்சு, சீனி விலை ஏறின நிலை, சனங்களுக்கு சலரோகமும் வாறேல்லை வாட்டே வெறிச்செண்டு கிடக்கு.

மற்ற மூட்டை : அதுக்கேன் உவ்வளவு கவலைப்படுறு, வா அங்காலை பிரசவ ஆஸ்பத்திரி இருக்கு அங்கை போவம். -டோ-

## பரீட்சைக் கனக் காண்டம்

[விடுதி மாணவிகள் 25 பேரில் வனஜா ''கழுதைப் பிறப்பென்றும்'' இளைஞர்களால் பிக்னிக் சென்று வந்த பெண்பேறே(யே) என்றும் அழைக்கப்பட்டவள். அவள் பரீட்சைபற்றி கண்ட கனவை கவிதையாக்கித் தருபவர் இணுவையூர் வாலி]

1. நாளை டிசம்பர் பரீட்சைக்கு நாள்வைத்து
நல்ல காற்று வருமொரு (Fan) (F) பானின்கீழ்
ரைற் லோங்ஸ் அணிந்த பேப்பர் போய் வந்தே ஓர்
தாளைத் தருகக் கனக்கண்டேன் மேரீ நான்

2. வகுப்பிலே மொக்குகள் நண்பர் குளாமெல்லாம்
வந்திருந் தென்னை வலுவாக எச்சரித்து
நெஞ்சிடியோடு நெருங்கி விடைத்தாளை
மஞ்சுளா கேட்க கனக்கண்டேன் மேரீ நான்

3. நேரமும் போக பரீட்சகர் எனைப்பார்க்க
நித்திரைபோல நிறை(ந்த) ஊத்தை மேசைமேல்
ஆனந்தியின் 'லவ்லர்' அருந்தவமே வந்தெந்தன்
அட்மிஷன் காட் கேட்க கனக்கண்டேன் மேரீ நான்

4. பின்னுள்ளாரெல்லாம், எனைப்பார்த்து தந்திரத்தால்,
மனையியல் பாடம் மற்றெல்லாம் கேட்கவே
கோபமாய் வந்த பரீட்சகர் என்தாழ்பற்றி
சிகப்புமைகீற கனக்கண்டேன் மேரீ நான்

5. எப்படித்தான் படித்தாலும் இங்கிலீஸ் பெயிலாவான்
கிப்பியைப் போன்றவன் கிறில் கிரிஜாவின்தம்பி
முன்னுலிருந்த முகவடிவு ரமணியையே
கொப்பியடிக்க கனக்கண்டேன் மேரீ நான்

- இணுவையூர் வாலி

**தலைக்கனம் கூடாது**
நாடுங்கள்
**லிங்கம் சலூன்**
K. K. S. றோட், இணுவில்.

# உங்கள் கேள்வியும் தவாத பதில்களும்

தீ ? ச ? ன்

※ இன்றுள்ள உணவுப் பஞ்சம் தீர வழியென்ன?

M. தர்மகுலசிங்கம், கச்சேரியடி

★ நீர் இதேபோன்ற கேள்விகள் கேட்பதை விடுத்தும், நான் வீண் பதில் தருவதை விடுத்தும் விவசாயத்திலீடு பட்டால்.. ......

※ உண்ண ஒருவருக்கு, உணவில்லையெனின் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதி இன்றிருந்தால்?

S. யோகேஸ்வரன், அராலி

★ பசி! பசி! பசி! என்று பாடிப்பாடி உணவில்லாமலே இறந்திருப்பார்.

※ பைத்தியம் பிடித்தோர்கள் அங்கொடைக்குத்தான் செல்ல வேண்டுமா?

★ இல்லை இல்லை. மந்திகை, தெல்லிப்பளை, சுதுமலை ஆகிய இடங்களுக்குப் போகலாம். உமக்கு ஆட்சேபனையில்லை யென்றால் இணுவிலிலுள்ள காரைக்காலிலேயே செய்விக்கலாம்.

※ நீங்கள் சர்வகலாசாலையில் படித்திருக்கிறீரா?

P. வசந்தன், நல்லூர்

★ இல்லை! படிப்பதற்கு யோசித்தேன் அப்போது பஞ்சத்தினால் அவைகள் எல்லாம் பூட்டப்படுவதுபோலவும் அப்போ சில அமளிதுமளி ஏற்படவும் கனவு கண்டேன். அதனால் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன்.

---

**பரிசு! 5 ரூபா  பரிசு!! 3 ரூபா  பரிசு!!! 2 ரூபா**

அடுத்த இதழிலிருந்து சிறந்த 3 கேள்விகளுக்கு மேற்குறிப்பிட்ட பரிசு வழங்கப்படும்.

கேள்விகள் அனுப்பும் முகவரி:

**S. K. தீசன்**
கலகலப்பு, இணுவில்.

※ சினிமா பார்ப்பது தவறு?

K. சந்திரன், மாங்குளம்.

★ சீனி, மாவையே பார்க்க முடியாத காலத்தில் சினிமா ஒரு கேடா?

※ நாங்கள் ஒரு பிக்னிக் போக நினைக்கிறோம் அழைத்தால் நீங்களும் வருவீர்களா?

★ ஏன் என்னையும் வம்பில் மாட்ட நினைக்கிறீரோ?

※ தாங்கள் அரசாங்க உத்தியோகம் பார்க்க நினைக்கவில்லையோ?

கே. மணி, உடுவில்

★ அரசாங்கமா? அப்படியொன்று இலங்கையில் இருக்கிறதா?

※ மனிதன் காசுக்கா? கடவுளுக்கா முதலிடம் கொடுக்கிறான்?

V. சேகரர், மானிப்பாய்

★ கடவுள்கூட தனக்கு முன் உண்டியலை வைக்கிறான் வணங்குபவன் கூட அதன் பக்கத்தில் நின்று வணங்குகிறான், மொத்தத்தில் காசேதான் கடவுளடா!

※ கலகலப்பு விற்பனை முன்னர் குறைவாக இருந்ததாம் இது உண்மையா?

R. மோகன், சுண்டிக்குளி

★ யாழ் பஸ் நிலைய சூழலிலுள்ள பத்திரிகை விற்பனையாளர்களிடம் போய் இதனைக் கேட்டுப்பாரும்.

தாங்கள் அடிக்கடி கொழும்பு போய் வருகிறீர்களாம் ஏன்?

சத்தியமாதியாகராஜா எம் பியைச் சுடுவதற்கல்ல

※ உங்களைப்பார்த்து யாராவது கண்ணைக்காட்டினால்?

★ Gun(க்) கண்ணைக்காட்டினாலே பயப்பட மாட்டேன் கண்ணைக் காட்டினா லென்ன?

※ தாங்கள் பொலீசுக்கு பயப்படுவீர்களா? S. R. B. அவிசாவலை

★ ஒரு முறை பொலீசாரே எனது காலடியில் இருந்து கொண்டு எனது காலைக் கையால் பிடித்தார் (தியாகராஜா எம் பி துப்பாக்கிச் சூட்டின் சம்பவத்தின்போது கால் அடையாளம் எடுப்பதற்கு) எனக்கென்ன பயம்?

※ நீர் எந்தப்பாடசாலையில் படித்தீர்! K. விஸ்வம், வண்ணார்பண்ணை

★ சத்தியமாக வேம்படியில் அல்ல

※ நீங்கள் சாத்திரத்தில் நம்பிக்கையுள்ளவரா? K. செல்வராஜ், மூளாய்

★ முன்னர் இருந்தது இப்போ கையைக் காட்டினால் சாத்திரிமார் சிரிக்கிறார்கள் (சீனி விலையின்பின் என் கையில் ரேகையில்லையாம்.)

※ தாங்கள் அரசியலில் ஈடுபடுவீரா?

K. சற்குணம், வவுனியா

★ அரசியல் முட்டாள்களின் பொழுதுபோக்கு என ஒரு பெரியார் கூறியிருக்கிறார்.

ஸ்ரைக் செய்துவிடுவேன் அந்நேரத்தில் தன் வயிற்றெரிச்சலையெல்லாம் என்னில் கொட்டித்தீர்ப்பார் ஆனுல் அவரின் புருசன் புங்குடுதீவுப் புண்ணியத்தாருக்கு விழும் பேச்சுக்களைவிடக் குறைவுதான்.

அன்று 9 மணியிருக்கும் இரவாகத் தானிருக்க வேண்டும் ஏனென்ருல் இரவு 9 மணிக்குத்தான் சமையலறையில் உள்ளி, கடுகு, பெருஞ்சீரகம் மல்லி, மிளகாய், சீனி முதலியன அன்று எவ்வளவு செலவான தென சாதாரண கணக்கெடுப்பார். வடிவக்கா.

எனது சரித்திரத்திற்கே முற்றுப்புள்ளி.

✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲

## தீபாவளி தித்திப்பு

தீபாவளி தினத்தன்று சனங்கள் விழுந்தடிக்க
கவுஸ்புல் போட் அங்கு விழுந்திடுமே! விழுந்திடினும்
அடுத்த காட்சிக்காய், அரையடியும் நகராமல்
நிற்பவனைக் காலாலுதை

இனுவை வாலி

✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲ ✲

வைப்பதுபோல, வானொலி ஒலித்தது என்ன, வடிவக்காவின் மரண அறிவித்தலா? இல்லை அப்போ குக்கர் எல்லாவற்றிற்கும் நிதியமைச்சர் வரிவிதித்துவிட்டாரா? அல்லது குக்கர்களை அரசாங்கம் எடுத்துவிட்டதா இல்லை, இல்லை,, மண்ணெண்ணையில் விலையுயர்வுபற்றியும் பெற்ரோல் விலையுயர்வு பற்றியும் வானொலியில் நெட்டத்தொளிவாக அறிவிக்கப்பட்டது. றேடியோ இயக்கும் கட்டை வடிவக்காவின் கைக்குள் படாத பாடுபட்டது. ர்ர்...டுப் வானொலியை திருகி நிப்பாட்டினுர் வடிவக்கா! கணவன் பக்கத்தில் இருந்திருந்தால், அவரின் காதே கைக்குள் வந்திருக்கும்; ஏதோ புண்ணியத்தால் [பாடசாலையில் படிக்கும் காலத்தில் பணிஸ் வழங்கிய புண்ணியமோ என்னவோ] வழமைபோல் 7 மணிக்கோ பாண் வாங்கச் சென்று விட்டார் திரும்பிவர 2½ மணி நேரம் செல்லும், வடிவக்காவின் ஆத்திரம் உள்ளிவிலைபோல் ஏறியது.

வானொலியை நிற்பாட்டியிருந்தாலும் அவரது வெருளி விசாலாட்சி வீட்டு செய்தியையும் கேட்கத் தவறவில்லை. நல்ல வேளை தலைமயிர் நரையை மறைப்பதற்குப் பூசும் மையின் விலை அதிகரிக்காதது ஒரு சந்தோசத்தையும் கொடுக்கத்தான் செய்தது. கடவுளே என்ன இருந்தாலும், நெடுகலும் படம் பாக்கிற கிழவியளுக்கு எப்பிடியென்ருலும் வரிவர வேணும். [வெருளி விசாலாட்சி வாரத்தில் 4 படம் பார்ப்பதே வடிவக்காவின் வேண்டுகோளுக்கு காரணம்]

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தமிழ்ச்சேவை ஒன்று. அறிவித்தல்கள் முதலில் மரண அறிவித்தல். இதென்ன இந்த றேடியோ ஓட்ட மற்றிக் வேலை செய்யுது. இப்பதானே நிற்பாட்டினுன் என நினைத்துக் கொண்டு றேடியோவை நோக்கி நடந்தவர் ஒரு முத்தல் என அழைக்கப்படும் 12 அவுன்ஸ் பாண் 1½ மைல் கியூவில் வாங்கி பாதசாரியாக வந்த புங்குடுதீவு புண்ணியம் வெற்றிப்பெருமிதத்துடன் நிற்பதைக் கண்டாள். வடிவக்காவுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை, 12 அவுன்ஸ் பாண் எவ்வளவு சந்தோஷத்தை தொடர்கிறது:

[வாசகர்களே, எனது சுயசரிதையை தொடங்கிவிட்டு வடிவக்காவையும் புண்ணியத்தாரையும் கூறியதற்கு மன்னிக்கவும்]

மண்ணெண்ணை விலையுயர்வைக் கேட்டு வடிவக்கா விடுவிடுவென்று என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறு அவளுடைய மலர்க்கரம் [புண்ணியத்தால் அவரைக் கரம் பற்றும் போது முதன் முதலில் மலர்க்கரம் என்றுதான் சொன்னுராம் ஆனுல் அது மலட்டுக்கரம் என்று பக்கத்து வீட்டு விசாலாட்சியக்கா முதல் பம்பலப்பிட்டி பவளக்காவை எல்லோருக்கும் தெரியும் அவரின் மேற்கூறிய கரம் என்குரல் வளையை அமுக்குவது போன்றிருந்தது. தடால் என்று ஓர் பெட்டியில் போய் விழுந்தேன்.

புண்ணியத்தால் ஒரு சிரிப்பு சிரித்தவண்ணம் நிற்கிருர் அவரும் என்னைப்போல சுயசரிதை சொல்லும் நாள் வெகுதூரத்திலில்லை.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தமிழ்ச்சேவை ஒன்று முன்னேற்றப் பாதையிலே'' வெருளி விசாலாட்சிவீட்டு வானொலி ஒலிப்பது என காதிலும் விழுகிறது.

---


மனைவி : என்னங்க கொழுப்பில் உணவு தட்டுப்பாடாக இருந்தும் உங்கள் உடம்பு தள, தளவென்றிருக்கிறதே

கணவன் : அதுதான் எனக்கு கவலையில்லையே சுத்தமான சைவ உணவு வகைகளெல்லாம் எனக்கு ஆரியபவானில் கிடைக்கிறதே!

# ஆரிய பவான்

(சைவ ஹொட்டல்)

79, 2-ம் குறுக்குத் தெரு

**கொழும்பு-11**

# சமையல் (ெ) க (ா) லை

தருபவர் "விசாலாட்சியக்கா"

## விலைவாசி காலத்தில் சம்பல் அரைக்கும் முறை

– "டோ" (க்)

தேவையான பொருட்கள்

மிளகாய்

(சந்தக்கா இனம் ஆயின் — 15
சாதாரண மிளகாய் — 10

தேங்காய், 35 சதத்திற்கு வாங்கியிருப்பின் பாதி
,, 50 ,, ,, 1/3

உப்பு, வெள்ளை உப்பு ½ மேசைக் கரண்டி

வெள்ளை நிறமென கடைக்காரன் ஏமாற்றிதந்த கறுப்பு உப்பு ¼ மேசைக் கரண்டி

ஒரு அம்மி (ஒரு மம்மி) அல்லது
ஒரு குழவி (ஒரு குளவி)

தண்ணீர் இறைக்கும் இயந்திரம்
மில்போட் இயந்திரம்
முதலியன பழுது பார்க்கவும்
விற்கவும் வாங்கவும்
நாடுங்கள். T. சேகர்
இல. 7 ஸ்ராலின் வீதி,
விவேகானந்தா அச்சக அருகாமையில்
யாழ்ப்பாணம்.

செய்முறை

(பக்கத்து வீட்டில் கடன்) வாங்கிய மிளகாயை தண்ணீரில் ஊறவிட்டு (கொழும்புப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடாக இருந்தால் தண்ணீரில் ஊறவைப்பதை தவிர்க்கவும்) மம்மியின் உதவியுடன் அம்மியில் இட்டு நன்றாக அரைக்கவும், 150 றாத்தல் நிறையுள்ளவராயின் 37½ முறையும், 100 றாத்தல் நிறையுள்ளவராயின் 42 முறையும் அரைத்தல் வேண்டும், பின்னர் துருவிய தேங்காயையும் (கையில் காயம் ஏற்படாமல்) துப்பரவாக்கிய வெண்காயத்தையும் சேர்த்து மீண்டும் அரைக்கவும் (பின்னர் எலுமிச்சம் பழத்தில் சில துளிகள் சேர்த்தல் விரும்பத்தக்கது) இதனை சாதாரண வீட்டில் 10–15 பேருக்கு பரிமாறலாம்.

## அடுத்த இதழ்களில்....

- ★ மரவள்ளி மாவில் வீதிகளில் போஸ்ரல் ஒட்டும் பசை காச்சும் முறை.
- ★ கடலாமையில் கட்லெட் செய்யும் முறை.
- ★ பப்பாசிப்பழ பாயாசம்.
- ★ சோழவத்தலும், சோழவறுவலும் செய்வது எப்படி.
- ★ புலுனி புரியாணியும் புளிச்சாதமும்.
- ★ கடல் ஆமை கட்லெட்.

---

**தேவை! தேவை!! (THEY WHY?)**

கியூக்களில் நின்று பாண் வாங்கவும், சீனி வாங்கவும், தண்ணீரில்லாமல் சமையல் செய்யவும் அனுபவம் பெற்ற வேலைக்காரப் பையன் தேவை.

விபரங்கட்கு,
அசட்டுராமன்,
அங்கொடைவில்லா, அறிவுபுரம்.

---

## போளி கிண்டவா? போஸ்டர் ஒட்டவா?

இன்டே வாங்குங்கள்,

மரவள்ளி மாவுடன் வச்சிரம் கலந்த
மாரிமுத்து மரவள்ளி ஒட்டுப்பசை.

ஏக விநியோகஸ்தர்கள்:

பச்சையப்பா அன் கோ
களிப்பிட்டி, ஒட்டுபுரம்.

சுத்தத்திற்கும் சுகதேகத்திற்கும்
சிறந்த சாப்பாட்டுக்கடை
**137, மலிபன் வீதி,**
**கொழும்பு-11.**

**சிறந்த முறையில்**
**சிகை அலங்கரிக்கத்**
**ராஜா சலூன்**
தருமலிங்கம் வீதி,
**வவுனியா.**

# வராத படத்திற்கு வரும் ஓர் விமர்சனம்

# AN EVENING IN VEEMBADI

(PADA VIMARSANAM)

'DOW'

## OR

## ARE WE GO TO PICNIC?

அது ஓர் நல்ல சாலை அதையடுத்து ஓர் பூஞ்சோலை பஞ்சவர்ணக் கிளிகள் சில அதையே லபக் கென்று தூக்கிச் செல்ல வட்டமிடும் கழுகுகள் சில இப் படியான சூழ்நிலையில் எழுந்து ஓடுகிறது:

(ஒருவரும் எழுந்து ஓடவில்லை)

இதில் துணிவை நாம் கட்டாயம் பாராட்ட வேண்டும்.

(யாருடைய துணிவை ?...!)

''புரியாணிப்பாசலிலே புன்சிரிப்பு தோன்றுமா'' என்ற இனுவையூர் வாலியின் பாடல் எல்லோரையும் கவர்ந்து விட்டது.

இது மர்மப்படமல்ல

இருப்பினும் பல மர்மங்கள் இறுதியில் வெளியாகின்றன.

அறையில் நடந்தாலும் விரைவில் அம்பலமாகிவிடும் என்ற பாடலின் கருத்து இதில் பிரதிபலிக்கிறது.

மொத்தத்தில் பலரைக் கவர்ந்த சித்திரம்

**5+5=15 ? !**


சகல விதமான தையல் மெஷின்களும்
சிறந்த முறையில் சேவிஸ் செய்யவும்
(விடுகளில் சென்று)
பழுது பார்க்கவும் நாடுங்கள்

வ. போதிநாதன்

136, K. K. S வீதி, சுன்னாகம்.

---

திபாவளி வாழ்த்துக்கள்

வாருங்கள் ! வாருங்கள் !

★ பாடசாலைப் புத்தகங்கள்
★ புடைவைத் தினுசுகள்
★ றபர் சிலிப்பர்கள்

முதலியன வாங்க

"சிங்கம்ஸ்"

(தேசிய சுவீப் ரிக்கற் சப் ஏஜென்ட்)

கண்டி றோட், மாங்குளம்

நகை அடைவு பிடிக்க உத்தரவு பெற்றவர்கள்

---

சிறந்த புகையிலை

மொத்தமாகவும் சில்லறையாகவும்

வாங்கவும் விற்கவும்

S. K. கணபதிப்பிள்ளை

அன் சன்ஸ்

91, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு


பெண்கள் மன்னிப்பார்களாக

# வெளிக்கிடடி விசுவமடுவுக்கு

(நகை + சுவை நாடகம்)

**விமர்சனம் :**

'டோ'

இருகுடும்பங்கள், குடும்பங்களிடையே ஏற்படும், குத்துவெட்டுக்களும் இருகுடும்பத்திற்கிடையே நடைபெறும் குத்து வெட்டுக்களும் சம்பாஷனைகள் இடையிடை ஆழ்ந்த கருத்துக்கள் பெரியோர்கள் சிரிக்க சிறியோர்கள் விளிக்கிறார்கள் குடிகாரனாக வருவபர், காலிலுள்ள இரு சிலிப்பரையும் நண்டு என கொண்டு வரும் கட்டம் நன்றாயிருக்கிறது. வேலிச் சண்டை வல்லியின் வயிற்றைக் கலக்குகிறது. எமது வயிற்றை உலுக்குகிறது. விவசாயிக்கு மதிப்பளிக்கும் கருத்து பிரதிபலிக்கிறது.

**எல்லோரும் முதலில் பாருங்கோ**

**வெளிக்கிடடி விசுவமடுவுக்கு**

பிறகு எல்லோரும் வெளிக்கிடுங்கோ விசுவமடுவுக்கு

படித்தீர்களா
↓
**“நான் ஏன் குடித்தேன்”**
கணபதி எழுதிய
மனதை உருக்கும் உண்மைக்
கதை விற்பனையாகிறது.

விசித்திர சினிமா இதழ்

# வெடிகுண்டு

# “VEDIKUNDU”

ஆசிரியர்: “டோ” Editor: “Dow”

**இம்முறை வெடிகுண்டு வார வெளியீட்டில்**

★ டைம் பாம் தயாரிக்கும் முறை [கட்டுரை]
★ கணவதி வீட்டில் கண்ணீர்ப்புகை
★ காதலிக்கேன் கைக்குண்டு [கவிதை]
★ எறிவெடியும் எலும்புக்கூடும் கதை

வெடி 1 அட்டவ நவமி அவசரவெளியீடு குண்டு ?

## நடிகை நளினாவிற்கு நாய்க்குட்டி கடித்தது நகச்சுற்று ஆப்பரேசன் நையீரியாவில்

( நிருபர் சீறுவாணம் )

பிச்சைக்காரர்கள் சிலருக்கு நிதி வழங்கிக்கொண்டிருந்த நடிகை நளினாவைக் கடித்துவிட்டு ஓடியது பக்கத்துவீட்டு பரந்தாமனின் நாய்.

காலில் இருந்து இரத்தம் வருவதற்கிடையில், தீயணைக்கும்படை, அம்புலன்ஸ், பொலீஸ் முதலியன அங்கே குழுமிவிட்டது. நளினாவின் ரசிகர்களின் அனுதாபக்குரல் எங்கும் ஒலித்தது.

‘‘விசிலடித்தான் வினாசித்தம்பி’’ என்ற படத்தின்மூலம் அறிமுகமாகி அதிக ரசிகர்களைக் கவர்ந்த நளினாவின் இச்சம்பவம்

[பக். 3]

**விளாம்பளத் திருட்டும் விசாரணைக் கமிஷனும் நானே தொடரும்**

## “கண்டிக்கு வா காதலிப்போம்”

### கீரிமலை உச்சியில் சூட்டிங் ஆரம்பம்

[ நிருபர் ஊசிவாணம் ]

காதலிக்கு காலை முறி என்ற வர்ணப் படத்தில், நீச்சலுடையில் நடித்த நடிகை நாகமணி, ஈவினிங் இன் வேம்படி என்ற முழு [ EVENING IN VEEMBADI ] நீள காதல் படத்தில் ஒப்பந்தமானதையடுத்து கண்டிக்கு வா காதலிப்போம் என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். அழகப்பாவும் 60 அழகிகளும் பட கதாநாயகன் அணில் குரல் அழகப்பா இதில் சொந்தக் குரலில் பாடி நடிக்கிறார்.

**நடிகையின் உண்மையான வயதுகள்**
↓
**த**
**ணி**
**க்**
**கை**

ஆசிரியர் :

**பஞ்சத்திலேன் கஞ்சி**
**படவசூல் விபரம் அடுத்த இதழில்**

## தேடுங்கள் அதனை நாடுங்கள்

மனைவி : என்னங்க நீங்கள் எங்கடை விளைபொருட்களை யெல்லாம் கொண்டுபோய் எப்படி நல்ல விலைக்கு விற்றுக்கொண்டு வருகிறீர்கள்.

கணவன் : எனக்குத்தான் அக்கவலையில்லையே நல்ல முறையில் உள்ளூர் விளைபொருட்களை வாங்கவும் விற்கவும்.

★ **K. M. P. ஏஜென்சி** ★

130, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11

தொலைபேசி : 25444

---

பொதிகளை
நல்லமுறையில் இடத்திற்கிடம் எடுத்துச்செல்ல
நாடுங்கள்

★ **பவானி ரான்ஸ்போட் சேவிஸ்** ★

திருநெல்வேலி (சந்தி), யாழ்ப்பாணம்.

---

ஆதரவாளர்களுக்கு ''கலகலப்பான''
தீபாவளி வாழ்த்துக்கள்

**வளர்மதி ரெக்ஸ்ரைல்**

உள்நாட்டு உற்பத்தி துணிகள் விற்பனையாளர்

176, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

★ உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளியுங்கள்: ★

---

ஆதரவாளர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்

**M. ராஜரட்னம்**

ஒட்டுமாங்கன்றுகள், மா, பலா, தோடை,
எலுமிச்சை, மாதுளை, முந்திரிகை
முதலியன விற்பனையாளர்கள்.

பலாலி வீதி, திருநெல்வேலி.

---

உங்கள் பிள்ளைகளை பெரியவர்களாக்குவது
உங்கள் கடமை
அவர்களை நல்லமுறையில், கல்விபயிற்றுவது
எங்கள் கடமை

**போல்ரன் கல்வி நிலையம்**

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

---

வெளிநாட்டு உள்நாட்டு குடிவகைகள்

சில்லறை விற்பனையாளர்

**கொழும்பு ரெஸ்ரோறன்ஸ்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைத் தபால் கந்தோரில் பதிவு செய்யப்பட்டது; பதிவு இலக்கம் Q. B. 59 - 300 - 474


## தித்திப்பான தீபாவளி வாழ்த்துக்கள்

## யாழ் உலோகத் தொழிற்சாலை

மக்கள் நவீன சந்தை, விற்பனை நிலையம்
யாழ்ப்பாணம்.

யாழ் உலோகத் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களான
அலுமினிய பித்தளைப் பாத்திரங்களும்
மற்றும் பொருட்களும் விற்பனையாளர்.

லேக்கவுஸ் பத்திரிகை
ஸ்றேற் றேடிங் உழவு இயந்திர ஏஜெண்டுகள்

தென்னை அபிவிருத்தி சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட
பசளை விற்பனையாளர்கள்.

6, மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## அடிபோடி பைத்தியக்காரி

wwwwwwwwww

வனஜா: ஏண்டி கிரிஜா, நீ தினம் தினம் விதம் விதமான சாரிகளையெல்லாம் அணிகிறாயே, இவற்றையெல்லாம் யார் உனக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்புகிறார்கள்.

கிரிஜா: அடி மண்டு, இவையொன்றும் இறக்குமதிச் சாரிகள் அல்ல. இவை சீமா சில்க் இண்டஸ்றீசில் தயாரிக்கப்பட்டவை.

சிறந்த சாரிகள் மற்றும் துணிகள்
உற்பத்தியாளர்கள்

## சீமா சில்க் இண்டஸ்றீஸ்

யாழ்ப்பாணம்.

துணிகளை வாங்கும்போது
சீமா தயாரிப்புகளையே கேட்டு வாங்குங்கள்


இப்பத்திரிகை 68, சுந்தரபவனம் இணுவிலைச் சேர்ந்த இதன் உரிமையாளரும், ஆசிரியருமான சி. கேதீஸ்வரன் (தீசன்) என்பவரால் யாழ். கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.